13th March 1961]

SRI N. R. THIAGARAJAN : காஷ் ரெமிட்டன்ஸ் என்ற இனத்தின் கீழ் சுமார் 86 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் முழு விவரம் தெரியவில்லை. அதைப்போலவே கல்விக்காக மட்டும் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது வரவுக்கு மேல் அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற ஜில்லாக்களைவிட அங்கு வரவுக்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் காரணம் என்ன? காஷ் ரிமிட்டன்ஸ் என்று இருப்பதற்கு விவரம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : தமிழ் நாட்டில் வரவு எவ்வளவு என்று பார்த்து அந்த அளவில் செலவு செய்வது என்பது கிடையாது. அது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை அல்ல. மாகாண வருவாயை மொத்தமாக எடுத்துக் கொண்டு எந்தெந்த இடங்களுக்கு என்னென்ன தேவையோ அந்த அடிப்படையில் தான் செலவு செய்யப்படுகிறது.

Girls' hostel (Gudiyatham)

*773 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தத்திலுள்ள சர்க்கார் பெண்கள் பயிற்சிப் பள்ளி மாணவிகள் தங்குவதற்கான விடுதிகள் எத்தனை இடங்களில் உள்ளன?

(இ) மாதம் வாடகை எவ்வளவு?

(உ) 1959-60-ல் மேற்படி விடுதிகளில் எத்தனை முறை திருட்டுப் போயிற்று?

(எ) என்னென்ன? எவ்வளவு மதிப்புடைய சொத்து திருட்டு போனது? திருட்டுப் போன சொத்து கிடைத்து விட்டதா?

(ஐ) சர்க்கார் கட்டடம் கட்ட உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) The hostel is accommodated in two private buildings.

(இ) Rs. 150 for both the buildings.

(உ) Only once.

(எ) The loss by theft included (1) cash of Rs. 19 50 nP. belonging to four students and (2) three fountain pens, one soap and one nose ornament. The value of the articles is not exactly known. The articles lost could not be recovered.

(ஐ) No, Sir.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[13th March 1961

Sri V. K. KOTHANDARAMAN : இந்த மாணவிகளுக்கு நிரந்தரமாக யாதொரு கட்டிடமும் இல்லாத காரணத்தால் அடிக்கடி பல வாடகைக் கட்டிடங்களில் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அடிக்கடி திருட்டுப் போகக்கூடிய அளவுக்கு அங்கு நிலைமை ஏற்படுகிறது. ஆகவே நிரந்தரமாகக் கட்டிடம் கட்டுவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : திருட்டுப் போவதற்கும் நிரந்தரமாக கட்டிடத்தை கட்டுவதற்கும் சம்பந்தம் இல்லை. நிரந்தரமாகக் கட்டிடம் இருந்தால் கூட திருட்டுப் போய்க்கொண்டிருக்கும். நிரந்தரமாகக் கட்டிடம் கட்டுவதற்கு இப்பொழுது ஆலோசனையில் இல்லை.

Iron deposits

* 774 *Q.*—**Sri P. G. MANICKAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் ஜில்லா சேர்வராயன் மலைப் பகுதியிலும், நீலகிரி ஜில்லாவில் ஒரு சில பகுதிகளிலும் கிடைக்கக்கூடுமெனப் பரிசிலனை செய்யப்பட்டு வரும் இரும்பு பாக்ஸைட் கனிப் பொருள்களை ஆராய்ச்சி செய்த அமெரிக்க பூமி வள ஆராய்ச்சி இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீலாரன்ஸ் பிளேட் அவர்களால் சென்னை சர்க்காருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் விவரங்களடங்கிய குறிப்பு ஒன்று சட்டசபை நூல் நிலையத்தில் வைக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes, Sir. A note on the salient features of the report of Mr. Lawrence Blade is placed in the library of the Legislature.

Slums (Vazhaipoocheri) and Kirimedu

Mr. SPEAKER: கனம் அங்கத்தினர் திரு. பக்கிரிசாமி பிள்ளை இடத்தில் இல்லாததால் கேள்வியும் பதிலும் சட்ட சபையின் நடவடிக்கையில் அச்சடிக்கப்படும்.

* 775 *Q.*—Sri S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for the delay in effecting improvements of the slums known as ' Vazhaipoocheri ' and ' Karimedu ' in Perambur area, Madras City?

The Hon. Sri R. VENKATARAMANAN : *Vazhaipoocheri slum* : The alternative site has been fully developed by the Corporation of Madras and is ready for occupation, but is considered by the Corporation that the shifting of the families may be deferred till the Slum proper (Private Land) which is under acquisition is taken possession of. There was some difficulty in regard to payment of compensation for this land which has since been resolved and it is expected that the award will be passed shortly by the Collector and the land handed over to the Corporation.